இந்திய உச்ச நீதிமன்றம்

2020-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் ரோகிண்டன் ஃபாலி நாரிமன்

மாண்புமிகு நீதியரசர் நவின் சின்உறா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் கே.எம்.ஜோசப்

சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண்.4206/2020

சீலன் (எ) ஜெயசீலன் ... மனுதாரர்

/எதிர்/

காவல் ஆய்வாளர் ... எதிர்மனுதாரர்

இந்திய தண்டனை சட்டம், 1860, பிரிவு 376(2) - குற்றச்சாட்டு இ.த.ச. பிரிவு 376(1)ன் கீழ் வனையப்பட்டுள்ளது என்றும், 376(2)-ன் கீழ் வனையப்படவில்லை என்பது மனுதாரரின் வாதம் ஆகும் - சங்கதிகளின்படி இ.த.ச பிரிவு 376ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டு இ.த.ச பிரிவு 376(2)-யையும் உள்ளடக்கும் – 6 வயதுடைய பாதிக்கப்பட்ட பெண் மனுதாரரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார் என்று சங்கதிகளின் அடிப்படையில் ஒருமித்த கருத்து எடுக்கப்பட்டுள்ளது - சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட பெண் மற்றும் நேரடி சாட்சியான அவருடைய தாயாரின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளது - சிறப்பு அனுமதி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு; சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண் 4206/2020

Crl.Rc. (MD) No.520/2015-இல் 22.07.2019 தேதியிட்ட மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் தீர்ப்பு மற்றும் உத்தரவில் இருந்து எழுந்த மேல்முறையீடு.

கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. ஆர்.பாசந்த், ஏ.வேலன், திருவாளர்கள். நவ்பிரீத் கௌர், ஸ்ரீ பால் சிங் ஆகியோர் முன்னிலையான தரப்பினர்களுக்காக ஆஜரானார்கள்.

<u>உத்தரவு</u>

<u>மாண்புமிகு நீதியரசர்கள் ஆர். எப். நாரிமன்</u>

1. 04.12.2020தேதியிட்ட உத்தரவு:

> "மனுதாரருக்கு ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு. ஆர். பாசந்த் அவர்களின் வாதம் கேட்கப்பட்டது. நீதிமன்றம் இ.த.ச. பிரிவு 376 (2) (f)-க்கு குறைந்தபட்ச தண்டனை 10 வருடங்கள் என சுட்டிக்காட்டியபோது, திரு. ஆர். பாசந்த் அவர்கள், குற்றச்சாட்டு இ.த.ச. பிரிவு 376(1)ன் கீழ் வனையப்பட்டுள்ளது என்றும், 376(2)-ன் கீழ் வனையப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.
>
> இதனடிப்படையில் திரு.பாசந்த் அவர்களை, குற்றச்சாட்டு வனையப்பட்ட உத்தரவை முன்னிலைப்படுத்த அனுமதிக்கப்பட்டது.

வழக்கானது ஒரு வாரத்திற்கு தள்ளி வைக்கப்பட்டது."

2. நீதிமன்றம் வனையப்பட்ட குற்றச்சாட்டை பரிசீலித்தது. கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஆர். பாசந்த் அவர்கள் வாதிட்டது போன்று, இந்த குற்றச்சாட்டு இந்திய தண்டனை சட்டம், பிரிவு 376(1)-ன் கீழ் மட்டும் வனையப்படவில்லை, ஆனால், பிரிவு 376-ன் கீழும் வனையப்பட்டுள்ளது மற்றும் இதில் பிரிவு 376(2) அடங்கும்.

3. எது எப்படியிருந்தாலும், 6 வயதுடைய பாதிக்கப்பட்ட பெண் மனுதாரரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார் என்பதை ஒருமித்து கண்டறியப்பட்டதை காண்கிறோம். பாதிக்கப்பட்டவரின் சாட்சியத்தை தவிர, சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான பாதிக்கப்பட்டவரின் தாயாரின் சாட்சியமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர் 18 வயதுக்கு மேற்பட்டவர் என்பதும், அவர் ஆண்மைத்தன்மை மிக்கவர் என்பதும் கண்டறியப்பட்டது. அவருடைய லுங்கி கைப்பற்றப்பட்டது, மற்றும் தலைமறைவாகிவிட்ட அவர் சம்பவம் நடந்த 15 நாட்களுக்கு பிறகு பிடிபட்டார். கீழமை நீதிமன்றங்கள் இரண்டும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஒரு கை மட்டுமே உள்ளது என்பதை பதிவு செய்துள்ளது. அதன் விளைவாக அவரால் பலாத்கார செயலில் ஈடுபடுவது என்பது உடல்ரீதியாக சாத்தியமற்றது என்று குற்றம் சாட்டப்பட்டவரின் வாதத்தை இரண்டு நீதிமன்றங்களும் பதிவு செய்தன. இந்த வழக்கின் இந்த அம்சத்தை இரு நீதிமன்றங்களும் கையாண்டுள்ளன, அதை இந்நீதிமன்றமும் ஏற்றுக்கொள்கின்றது - அப்படியொரு சாத்தியம் இல்லை. எனினும், அரசு தரப்பில் மேல்முறையீடு செய்யாததாலும், இந்த சம்பவம் நடந்து 20 வருடங்கள்

ஆகிவிட்டதாலும், நாங்கள், பிரிவு 376 (2)-க்குள் செல்லாமலும் மற்றும் வழக்கு சங்கதிகளின் அடிப்படையில் குறைந்தபட்ச தண்டனையான 10 வருடத்திற்கு குறைக்கபட வேண்டுமா என்பதை முடிவு செய்வதற்கு முன்பாகவே சிறப்பு அனுமதி மனுவை தள்ளுபடி செய்கிறோம்.

5. அதன்படி, இந்த சிறப்பு அனுமதி மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

சிறப்பு அனுமதி மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."